ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

Press Notice No: HRC/P/i/T/02/07/25

## ஊடக அறிவிப்பு

### மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டக்கடப்பாட்டை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் 1996ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்திற்கேற்ப 2025ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19ஆம் திகதி மேற்கொண்ட பரிசீலனைகளைத் தொடர்ந்து அதன் பரிந்துரைகளை அரச தரப்பு நிறுவனங்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டக்கடப்பாடுகள் தொடர்பாக மீண்டும் மீண்டும் வலியுத்த விரும்புகின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழு, அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் உட்பட அனைத்து அரச நிறுவனத் தலைவர்களுக்கும் இக்கடப்பாடு தொடர்பாக நினைவூட்டிக் கொள்கின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவானது ஆணைக்குழுச் சட்டத்தின் உறுப்புரை 15(7) இக் கேற்ப வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் குறித்த அரச நிறுவனங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள் யாது என்பதை ஆணைக்குழுவிற்கு அறியத்தர இறுதித்தினம் ஒன்றை நிர்ணயிக்க கூடியதாக உள்ளது. இவ்வாறான ஆணைக்குழுவின் வேண்டுகோளானது அனைத்து அரச நிறுவனங்களுக்கும் சட்டக்கடப்பாட்டை உண்டுபன்னுகின்றது. அதற்கு மேலதிகமாக உள்நாட்டலுவல்கள் பொது நிர்வாக அமைச்சு மூலம் வெளியிடப்பட்ட 17ஃ2005 இலக்கத்தின் சுற்றறிக்கையின் ஊடாகவும் எல்லா அரச நிறுவனங்களும் மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது.

இந்த கடப்பாடானது மிகத் தெளிவாக இருந்த போதிலும் குறிப்பிடத்தக்க அரச நிறுவனங்கள் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அசமந்த போக்கை கடைபிடிப்பதை ஆணைக்குழுவானது கூர்ந்து அவதானிக்கின்றது. இதற்கு அவர்கள் நாம் பரிந்துரை தொடர்பாக ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்துள்ளோம் என்ற

காரணத்தை முன்வைத்த போதிலும் அவ்வாறான மேன்முறையீட்டு முறைமை ஆணைக்குழுச் சட்டத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்பதை மிக்க உறுதியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றது. ஆகவே பரிந்துரையை செயற்படுத்தாமைக்காக முன்வைக்கப்படுகின்ற எந்த நியாயமும் அடிப்படையற்ற மற்றும் சட்டத்துக்கு புறம்பானதுமானதுமாகும். மனித உரிமைகள் ஆணைக்குழு அதனது அதிகாரத்தை மதிக்கும்படி எல்லா அரச நிறுவனங்களையும் கேட்டுக்கொள்வதோடு சட்டக்கடமைகளை நிறைவேற்றவும் நாட்டின் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் படியும் வேண்டிக்கொள்கின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தவறுவதானது அவர்களுக்கு எதிரான சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய எதிர்விளைவுகளை கொண்டுவரும் என்பதையும் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

நிஹால் சந்திரசிறி,
ஊடக செய்தித் தொடர்பாடல் இயக்குனர்,
பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு பிரிவு,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

02.07.2025

தொலைபேசி 011 2505595
தொலைநகல் : rm.director.hrcsl@gmail.com